நபர்களுக்கு வழங்கி வருகிறது. அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதி வருவாய்த் துறை நிலையாணை எண் 21-ன்கீழ் வரையறைக்குட்பட்டு வருமேயானால், நிச்சயமாக அவர்களுக்கு வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 80, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

80—

ஈட்டுறுதி மருத்துவமனை

***5259— திரு. சு. குணசேகரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாநகரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாநகரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா என்று திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள். திருப்பூரில் 100 படுக்கைகள் கொண்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை துவங்குவதற்கு, இந்து சமய அறநிலையத் துறைக்குட்பட்ட அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயிலுக்குச் சொந்தமான 7.46 ஏக்கர் நிலம், ரூ.11 கோடியே 91 இலட்சம் செலவில், இந்து சமய அறநிலையத் துறையிடமிருந்து 18—10—2012 ஆம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின்மூலம் தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தால் வாங்கப்பட்டு, அந்நிலத்தினைச் சுற்றி ரூ.72 இலட்சத்து 90 ஆயிரம் செலவில் சுற்றுச் சுவர் கட்டப்பட்டுள்ளது. மேலும், சுற்றுச் சுவர் கட்டிய பிறகு, இதனை எதிர்த்து அருள்மிகு செல்லாண்டியம்மன் கோயிலின் பரம்பரை பூசாரி திரு. ஆறுமுகம் மற்றும் 15 பேர், மேற்படி நிலம் தங்களுக்குச் சொந்தம் என உரிமை கோரியதால் திருப்பூர் நீதிமன்றத்தில் ளி.ஷி. ழிஷ். 90/2013 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜுன் 23]

மேலும், திருப்பூர் மாவட்டத்திலிருந்து 46 கிலோ மீட்டர் தொலைவில், கோயம்புத்தூர், சிங்காநல்லூரில் மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ், 506 படுக்கை வசதிகள் மற்றும் அனைத்து சிறப்பு சிகிச்சைப் பிரிவுகள் கொண்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மும்மதமும் சம்மதம் என்று வாழ்ந்து, எம்மதமும் என் மதம் என்று மத நல்லிணக்கத்தை உலகத்திற்கே பறைசாற்றிய ஒப்பற்ற தலைவி, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் மனதில் மறைந்தும் மறையாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எங்கள் கழகத்தின் காவல் தெய்வமாக விளங்கி, குடும்பத்தின் குல தெய்வமாக விளங்கிக்கொண்டிருக்கிற, தங்கத் தாரகை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் நினைவிடத்தை நோக்கி என்னுடைய முதற்கண் நெஞ்சார்ந்த நன்றிகலந்த வணக்கத்தினைச் சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சபையில் இந்த வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்ல திட்டங்களைச் செயலாற்றி வருகிற எங்கள் கொங்குநாட்டுச் சிங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், அவரோடு உறுதுணையாகப் பணிபுரிந்து கொண்டிருக்கிற மற்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய திருப்பூர் தெற்கு தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய கடந்த அரசில், ஐந்து வருடங்களுக்கு முன்பாகவே 100 படுக்கைகள் கொண்ட ஒரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன் அவர்கள் அறநிலையத் துறை அமைச்சராக இருந்தபோது அறிவித்தார்கள். ஆனால், ஐந்து வருடங்களாக வழக்கு நிலுவையில் இருக்கிறது. திருப்பூர் சுமார் 10 இலட்சம் தொழிலாளர்கள் வாழ்கிற பகுதியாகும். திருப்பூரில் பனியன் தயாரிக்கும் தொழில் மற்றும் அதனைச் சார்ந்த உப தொழில்கள் நடைபெறுகின்றன. அந்தத் தொழிலாளர்கள் கிட்டத்தட்ட 100 கோடி ரூபாயை ஆண்டொன்றுக்கு ஈட்டுறுதிக் காப்புறுதிக் கட்டணமாக வாரியத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, 200 படுக்கைகள் கொண்ட மற்றொரு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையை திருப்பூர் மாநகரப் பகுதியில் அமைத்துக் கொடுத்தால் தொழிலாளர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும்.

எப்பொழுதும் பனியன் தொழிலைக் காத்து வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, இந்தக் கோரிக்கையை கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், திருப்பூரில் ஈட்டுறுதி மருத்துவமனையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். முன்பே ஒரு மருத்துவமனை கட்டுவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டபோதிலும், இந்த மருத்துவமனையின் இடம் குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. இந்த வழக்கினை விரைவில் முடிப்பதற்கு மாநில மருத்துவ ஆணையர் அவர்களுக்கு தமிழக அரசால் அறிவுரை வழங்கப்பட்டது. இவ்வழக்கு, திருப்பூர் மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் 5-1-2015 ஆம் நாளன்று விசாரணைக்கு வந்தது. ஆனால், மருத்துவமனை இடத்தைச் சொந்தம் என உரிமை கொண்டாடும் பரம்பரை பூசாரிகள் யாரும் விசாரணையன்று நீதிமன்றத்திற்கு வரவில்லை. கடைசியாக திருப்பூர் மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் இவ்வழக்கு 8-6-2017 அன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த நிலத்திற்கு உரிமை கொண்டாடும் திரு. ஆறுமுகம் மற்றும் 15 பேரில் 2 நபர்கள் விசாரணைக்கு வராததால், வழக்கு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு முடிந்த பின்னர், தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்தால் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, மாநில அரசிடம் ஒப்படைக்கப்படும். தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகமானது ஒரு மத்திய அரசு நிறுவனமாகும். இருப்பினும், தொழிலாளர் மீது அக்கறை கொண்டுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, தொழிலாளர் நலன்கருதி வழக்கை விரைவில் முடிப்பதற்கு தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு திருப்பூர் வடக்கு தொகுதியில் காப்புறுதி மருத்துவமனை அமைக்க ஏற்கெனவே உத்தரவிட்டிருந்தது. 10 இலட்சம் தொழிலாளர்கள்*

2017 ஜூன் 23]

வாழ்கின்ற பகுதி என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கின்றேன். தொழிலாளர் மாநில காப்புறுதிக் கழகம் 200 படுக்கைகளைக் கொண்ட மருத்துவமனையை அமைக்க அனுமதி தருவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் எனது தொகுதியில் நிறைய இடங்கள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்தும் மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களிடம் பரிந்துரை செய்து, திருப்பூர் தெற்கு தொகுதியில் 200 படுக்கைகள் கொண்ட ஒரு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனையைப் புதிதாக ஏற்படுத்தித் தர இந்த நேரத்திலே அன்போடு கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன், அவ்வளவுதான். உங்களுக்கான வாய்ப்பு முடிந்தது. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.*

திரு. சு. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசிலுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும் திருப்பூர் தெற்கு தொகுதி மக்களின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, ஆணையை உடனடியாகப் பிறப்பிக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]